# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

# 1998 ஆம் ஆண்டின் 51 ஆம் இலக்க, தேசிய நூலக மற்றும் ஆவணப்படுத்தல் சேவைகள் சபைச் சட்டம்

---

(1998, நவெம்பர் மாதம் 18 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது

---

1998, நவெம்பர் மாதம் 20 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை: ரூபா 19.00 தபாற் செலவு : ரூபா 5.25

# 1998 ஆம் ஆண்டின் 51 ஆம் இலக்க, தேசிய நூலக மற்றும் ஆவணப்படுத்தல் சேவைகள் சபைச்சட்டம்

[1998 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 18 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச. வ. – ஓ 15/95

**தேசிய நூலக மற்றும் ஆவணப்படுத்தல் சேவைகள் சபையையும் நூலக மற்றும் ஆவணப்படுத்தல் நிலையத்தையும் தாபிப்பதற்கு ஏற்பாடு செய்வதற்கும் அத்துடன் அவற்றோடு தொடர்புடைய அல்லது அவற்றின் இடைநேர் விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பினவருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் திகதியும்.

1. இச்சட்டம், 1998ஆம் ஆண்டின் 51 ஆம் இலக்க, தேசிய நூலக மற்றும் ஆவணப்படுத்தல் சேவைகள் சபைச் சட்டமென எடுத்துக்காட்டப்படலாமென்பதுடன், அது, கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அமைச்சரினால் நியமிக்கப்படக்கூடியவாறான அத்தகைய திகதியன்று (இதனகத்துப்பின்னர் "நியமிக்கப்பட்ட திகதி" எனக் குறிப்பீடு செய்யப்படும்) நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

## பாகம் I

## தேசிய நூலக மற்றும் ஆவணப்படுத்தல் சேவைகள் சபையைத் தாபித்தல்

தேசிய நூலக மற்றும் ஆவணப்படுத்தல் சேவைகள் சபையைத் தாபித்தல்.

2. (1) (இதனகத்துப்பின்னர் "சபை" எனக்குறிப்பீடு செய்யப்படும்) தேசிய நூலக மற்றும் ஆவணப்படுத்தல் சேவைகள் சபை என அழைக்கப்படவேண்டிய குழுவொன்று தாபிக்கப்படல் வேண்டும்.

(2) சபை, (1) ஆம் உட்பிரிவின்கீழ் அதற்குக் குறித்தொதுக்கப்பட்ட பெயரைக்கொண்டு, இடையறாவழியுரிமையும் பொது இலச்சினை ஒன்றும் கொண்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாதல் வேண்டும் என்பதுடன், அது அப்பெயரைக் கொண்டு வழக்குத் தொடுக்கலாம் என்பதுடன் அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம்.

(3) சபையின் தலைமை அலுவலகம், கொழும்பில் உள்ள தேசிய நூலக மற்றும் ஆவணப்படுத்தல் நிலையத்தில் இருத்தல் வேண்டும். சபையின் கிளை அலுவலகங்கள், அமைச்சரின் எழுத்திலான முன்னங்கீகாரத்துடன், அவசியமானதென சபை கருதக்கூடியவாறான அத்தகைய இடங்களில் தாபிக்கப்படலாம்.

2—௨ 049767—1,100 (98/08)

சபையின் அமைப்பு.

3. (1) சபை, பின்வருவோரைக் கொண்டிருத்தல் வேண்டும் :

(அ) உயர்கல்வி மற்றும் பொதுக்கல்வி ஆகிய துறைகளில் பிரபல்யம் பெற்ற ஆட்களுள் இருந்து அமைச்சரினால் நியமிக்கப்படும் ஏழு உறுப்பினர்கள், இவர்களுள் ஒருவர் சபையின் தவிசாளராக அமைச்சரால் நியமிக்கப்படல் வேண்டும் ; அத்துடன்

(ஆ) ஏழு பதவிவழி உறுப்பினர்கள் அல்லது அவர்களது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள், அவர்கள் பின்வருவோராதல் வேண்டும் :

(i) கல்வி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுக்கான செயலாளர் ;

(ii) கலாசார அலுவல்கள் என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுக்கான செயலாளர் ;

(iii) பொது நிருவாகம் என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுக்கான செயலாளர் ;

(iv) 1981 ஆம் ஆண்டின் 78 ஆம் இலக்கச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட இயற்கைவளங்கள், சக்தி மற்றும் விஞ்ஞான அதிகாரசபையின் தவிசாளர் ;

(v) இலங்கை நூலகச் சங்கத்தின் தலைவர் ;

(vi) 1984 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்கச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட இலங்கை கணனி மற்றும் தகவல் தொழில்நுட்பப் பேரவையின் தவிசாளர் ; அத்துடன்

(vii) திறைசேரியின் பிரதிநிதி.

(2) அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதி ஒருவரால் சபையில் பதவிவழி உறுப்பினர் ஒருவர் பிரதிநிதித்துவம் செய்யப் படுகின்றவிடத்து, அத்தகைய பிரதிநிதியானவர், சபையின் ஏதேனும் கூட்டத்தில் அல்லது இச்சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட வேறு ஏதேனும் குழுவினது கூட்டத்தில் எழுகின்ற எல்லாக் கருமங்கள் தொடர்பிலும் அல்லது அவற்றில் எவையேனும் கருமங்கள் தொடர்பிலும், அத்தகைய உறுப்பினர் சார்பில் பேசுவதற்கும் செயலாற்றுவதற்கும் முழுத்தத்துவமுடைய வராதல் வேண்டும்.

(3) ஒராம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின்கீழ் நியமிக்கப்படும் சபையின் தவிசாளரும் ஒவ்வொரு உறுப்பின ரும், அவர் பதவியை முன்னரே வறிதாக்கினாலொழிய, மூன்றாண்டு காலப்பகுதியொன்றுக்குப் பதவிவகித்தல் வேண்டுமென்பதுடன், அவர் மீள நியமிக்கப்படுவதற்குத் தகவுடையவராதலும் வேண்டும்.

(4) சபையின் பதவிவழி உறுப்பினர் ஒவ்வொருவரும், அவர் எப்பதவி வகிக்கின்ற காரணத்தால் சபையின் உறுப்பினர் ஒருவராக இருக்கின்றாரோ, அப்பதவியை அவர் வகிக்கின்ற வரை, பதவி வகித்தல் வேண்டும்.

(5) சபையின் உறுப்பினர்களுக்கும், 7ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்படும் ஏதேனும் குழுவின் உறுப்பினர்களுக்கும் நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சருடனான ஒருப்பாட்டுடன் அமைச்சரினால் தீர்மானிக்கப்படக்கூடிய வாறான அத்தகைய ஊதியம் வழங்கப்படலாம்.

(6) தவிசாளர் அல்லது (1) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின்கீழ் நியமிக்கப்பட்ட சபையின் உறுப்பினர் எவரும் —

(அ) அவர் அமைச்சரினால் பதவியிலிருந்து அகற்றப் பட்டால் ; அல்லது

(ஆ) அமைச்சருக்கு முகவரியிடப்பட்ட கடிதம் மூலம் அவர் பதவியிலிருந்து விலகினால்,

அத்தகைய தவிசாளர் அல்லது உறுப்பினர் என்ற கோதாவில் பதவியை வறிதாக்கல் வேண்டும்.

(7) தவிசாளர் அல்லது (1) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின்கீழ் நியமிக்கப்பட்ட சபையின் உறுப்பினர் ஒருவர் இறக்கின்றவிடத்து அல்லது பதவியிலிருந்து விலகுகின்ற விடத்து அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுகின்றவிடத்து, அமைச்சர், இறக்கின்ற, பதவியிலிருந்து விலகுகின்ற அல்லது அகற்றப்படுகின்ற அத்தகைய தவிசாளரின் அல்லது உறுப்பினரின் இடத்தில், விடயத்துக்கேற்றவாறு தவிசாளராக அல்லது உறுப்பினராக இருப்பதற்கு இன்னோராளை நியமித்தல் வேண்டும்.

(8) இறக்கின்ற, பதவியிலிருந்து விலகுகின்ற அல்லது அகற்றப்படுகின்ற தவிசாளர் அல்லது உறுப்பினர் ஒருவரின் இடத்துக்கு (7) ஆம் உட்பிரிவின்கீழ் நியமிக்கப்படும் சபையின் உறுப்பினர் ஒருவர், அவர் இறப்பு அல்லது அகற்றப்படுதல் அல்லது பதவியிலிருந்து விலகல் மூலம் தமது பதவியை வறிதாக்கினாலொழிய, பதவியிலிருந்த தமக்கு முற்போந்தவரின் பதவிக்காலத்தின் முடிவுறாதெஞ்சியுள்ள காலப்பகுதிக்குப் பதவிவகித்தல் வேண்டும்.

(9) ஓராம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின்கீழ் நியமிக்கப் படும் சபையின் உறுப்பினர் ஒருவர், சுகயீனம் அல்லது வேறு இயலாமை அல்லது இலங்கையில் இல்லாமை காரண மாகத் தமது பதவியின் கடமைகளைப் புரிவதற்குத் தற்காலிகமாக இயலாது இருக்கின்றவிடத்து, அவரின் இடத்தில் செயலாற்றுவ தற்கென அமைச்சர் இன்னோராளை நியமிக்கலாம்.

(10) ஆளொருவர் பாராளுமன்றத்தின் உறுப்பினர் ஒருவராக, மாகாணசபையொன்றின் உறுப்பினர் ஒருவராக அல்லது உள்ளூரதிகார சபையொன்றின் உறுப்பினர் ஒருவராக வந்தால், அவர் சபையின் உறுப்பினர் ஒருவராக நியமிக்கப்படுவதில் இருந்து அல்லது உறுப்பினர் ஒருவராக தொடர்ந்து இருப்பதிலிருந்து தகைமையிழத்தல் வேண்டும்.

சபையின் பணிகள்.

4. சபையின் பணிகள் பின்வருவனவாதல் வேண்டும் :—

(அ) சமூகத்தின் எல்லாப் பிரிவுகளுக்குள்ளும் நூலக மற்றும் ஆவணப்படுத்தல் சேவைகளுக்கான தேவையை மதிப்பீடு செய்தல் அத்துடன் நூலக மற்றும் ஆவணச் சேவைகளை மேம்படுத்தல்;

(ஆ) 12ஆம் பிரிவின்கீழ் தாபிக்கப்பட்ட தேசிய நூலக மற்றும் ஆவணப்படுத்தல் நிலையத்தின் அலுவல் களை நிருவகித்தல், முகாமைசெய்தல் அத்துடன் கட்டுப்படுத்தல் ;

(இ) இலங்கையில் நூலக மற்றும் ஆவணப்படுத்தல் சேவைகள் அபிவிருத்திக்கான திட்டங்கள், செயற்றிட்டங்கள் மற்றும் செயற்பாடுகள் தொடர்பில் அமைச்சருக்கு ஆலோசனை வழங்குதல் ;

(ஈ) இலங்கையில் நூலக மற்றும் ஆவணப்படுத்தல் சேவைகளுக்கு ஒருங்கிணைப்பு வழங்குதல் அத்துடன் இவற்றுக்கான ஒத்துழைப்பை மேம்படுத்தல் ;

(உ) இலங்கையில் நூலகங்களுக்கும் நூலகப் பொறுப்பாளர்களுக்கும் தளபாடங்கள், உபகரணம் மற்றும் நூலக அத்துடன் ஆவணப்படுத்தல் பொருட்கள் உட்பட, உயர்தொழில் முறைசார் ஆலோசனை மற்றும் பயிற்சி வழங்குதல் அத்துடன் தொழில்நுட்ப, பொருள்சார் அத்துடன் நிதியுதவி வழங்குதலுக்கு வசதிசெய்தல் ;

(ஊ) இலங்கையில் நூலக மற்றும் ஆவணப்படுத்தல் தொழில்முறை அபிவிருத்தியை மேம்படுத்தல் ;

(எ) நூலக மற்றும் ஆவணப்படுத்தல் சேவைகளின் எல்லா அம்சங்கள் தொடர்பிலும் ஆராய்ச்சி, ஆய்வுகள் மற்றும் புலானாய்வுகள் ஆகியவற்றை ஆரம்பித்தல், மேம்படுத்தல், நடாத்துதல் அத்துடன் ஒருங்கிணைத்தல் ;

(ஏ) நூலக மற்றும் ஆவணப்படுத்தல் சேவைகளின் எல்லா அம்சங்கள் தொடர்பிலும் தேசிய நியமங்களை வகுத்தமைத்தல் அத்துடன் பகிரங்கப்படுத்தல் ;

(ஐ) வெளியீடுகளை உற்பத்திசெய்வதன் மூலமும் கண்காட்சிகள், வெளிக்காட்டல்கள் மற்றும் வேறு மேம்பாட்டுச் செயற்பாடுகள் மூலமும் வாசிக்கும் பழக்கத்தை மேம்படுத்தல், அத்துடன் வெளியீடுகளை உற்பத்தி செய்வதற்காக வேறு முகவர் நிலையங்களுக்கு ஆலோசனை மற்றும் உதவி வழங்குதல் ; அத்துடன்

(ஒ) அதன் வேலையின் ஏதேனும் அம்சம் தொடர்பில் கூட்டங்களை, பயிற்சிநெறிகளை, கண்காட்சிகளை அத்துடன் வேறு செயற்பாடுகளை ஒழுங்கமைத்தல்;

(ஓ) அதன் செயற்பாடுகளின் ஏதேனும் அம்சம் தொடர்பில் போட்டிகள், பரிசுகள் மற்றும் அளிப்புகள் ஆகியவற்றை ஆரம்பித்து நிதியுதவி அளித்தல் ; அத்துடன்

(ஔ) அதன் பணிகளை நிறைவேற்றுவதற்கு அவசியமானதென அல்லது உசிதமானதென அல்லது அவற்றுக்கு இடைநேர்விளைவானதெனச் சபை அபிப்பிராயப்படுகின்ற அத்தகைய எல்லாச் செயல்களையும் கருமங்களையும் செய்தல்.

சபையின் தத்துவங்கள்.

5. சபைக்குப் பின்வரும் தத்துவங்கள் இருத்தல் வேண்டும் :—

(அ) தேசிய நூலக மற்றும் ஆவணப்படுத்தல் நிலையத்தையும் அத்துடன், அதன் பணிகளை நிறைவேற்றுவதற்கு அவசியமானதெனச் சபை கருதக்கூடியவாறான அத்தகைய வேறு நூலகங்களையும் ஆவணப்படுத்தல் நிலையங்களையும் தாபித்தல், முகாமை செய்தல் அத்துடன் பேணுதல் ;

(ஆ) அதன் தத்துவங்களைப் பிரயோகிப்பதற்கு அல்லது அதன் கடமைகளை நிறைவேற்றுவதற்கு, குறிப்பாக பின்வருவன தொடர்பில், அவசியமாகக்கூடியவாறான அத்தகைய எல்லா உடன்படிக்கைகளையும் ஒப்பந்தங்களையும் செய்தலும் நிறைவேற்றுதலும் :

(i) (179 ஆம் அத்தியாயமான) அச்சீட்டாளர்கள், வெளியீட்டாளர்கள் கட்டளைச் சட்டத்தின்கீழ் தேசிய அருஞ்சுவடிகள் திணைக்களத்தில் வைப்பீடு செய்யப்பட்டுள்ள இலங்கை வெளியீடுகள் மூலமாகவும் கொள்வனவு, அன்பளிப்பு, பரிமாற்றம் மூலமாகவும் நூலக மற்றும் ஆவணப்பதிவுப் பொருட்களைக் கொள்ளுதல் ;

(ii) புத்தகப் பட்டியல் சார்ந்த பதிவேடுகளை உருவாக்குதலும் சேகரித்தலும் அத்துடன் பரப்புதலும் ;

(iii) நூலகங்களையும், ஆவணத்தொகுப்பு நிலையங்களையும் தாபித்தல், நடைமுறைப்படுத்துதல் அத்துடன் அபிவிருத்தி செய்தலும், நூலக மற்றும் ஆவணத்தொகுப்புச் சேவைகளுக்கு ஏற்பாடு செய்தலும் ;

(iv) நூலக மற்றும் ஆவணத் தொகுப்புப் பொருள் களை நூலகங்களுக்கிடையே இரவல் கொடுத் தலும் பிரதிபண்ணுதலும் ;

(v) வெளியீடுகளைத் தயாரித்தல், உற்பத்தி செய்தல் அத்துடன் விநியோகித்தல் ;

(vi) நூலக மற்றும் ஆவணத் தொகுப்புப் பணியாட் டொகுதியினர் அத்துடன் பயன்படுத்துநர் என்போரின் கல்வியும் பயிற்சியும்.

(இ) ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தை கொள்ளுதல், வைத்திருத்தல் அத்துடன் விற்றல், குத்தகைக்கு விடுதல், ஈடுவைத்தல், கொடுத்து மாற்றுதல் அல்லது வேறுவகையில் அதனைக் கையுதிர்த்தல் :

ஆயின், எவ்வாறாயினும் சபையின் அசைவற்ற ஆதனம் எதுவும், அமைச்சரின் எழுத்திலான முன் னங்கீகாரமின்றி விற்பனை செய்யப்படுதலாகாது ;

(ஈ) ஏதேனும் வங்கியில் நடைமுறை, சேமிப்பு அத்துடன் வைப்புக் கணக்குகளைத் திறத்தலும் பேணுதலும் ;

(உ) இலங்கையில் அல்லது இலங்கைக்கு வெளியே ஆட்களிடமிருந்தும், ஆட்கள் குழுக்களிடமிருந்தும், மானியக் கொடைகளை அல்லது நன்கொடைகளை ஏற்றுக்கொள்ளுதல் ;

(ஊ) சபையானது தோதானதெனக் கருதுகின்றவாறான இச்சட்டத்தினால் சபைக்கு அளிக்கப்பட்ட அல்லது அதன்மீது சுமத்தப்பட்ட அல்லது அதற்குக் குறித்தொதுக்கப்பட்ட ஏதேனும் தத்துவத்தை, கடமையை அல்லது பணியை தவிசாளருக்கும், பணிப்பாளர் தலைமையதிபதிக்கும் கையளித்தல் ;

(எ) சபையின் பணிகளை எய்துவதற்குப் பயன்படுத்தப் படுவதற்கான வருமானத்தை உருவாக்குவதற்காகச் சபையின் பணிகளுடன் ஒவ்வாதனவாயிராத செயற்பாடுகளில் ஈடுபடுதல் ;

(ஏ) இச்சட்டத்தின்கீழ் அதன் பணிகளைத் திறமையாக நிறைவேற்றுவதற்கும், அதன் கடமைகளைப் புரிவதற்கும் அவசியமென அது கருதுகின்றவாறான அத்தகைய எண்ணிக்கையினரான அலுவலர்கள், முகவர்கள் அத்துடன் சேவையாளர்கள் என்போரைத் தொழிலுக்கமர்த்தலும் அத்துடன் அவ்வாறு நியமிக்கப்பட்ட எவரேனும் அலுவலர், முகவர் அல்லது சேவையாளர்மீது கட்டுப்பாட்டைப் பிரயோகித்தலும் நிறைவேற்றுதலும் அவர்களுள் எவரையும் பதவிவிலக்குதலும்.

சபையின் தவிசாளர்.

6. (1) சபையின் தவிசாளர் சபையின் எல்லாக் கூட்டங்களுக்கும் தலைமை தாங்குதல் வேண்டும். அவர் வருகை தராதபோது, ஏதேனும் கூட்டத்திற்குச் சமுகமளித்திருக்கும் சபை உறுப்பினர்கள், அவர்களிடையேயிருந்து ஒருவரை, அத்தகைய கூட்டத்திற்குத் தலைமைதாங்குவதற்கெனத் தேர்ந்தெடுத்தல் வேண்டும்.

(2) தவிசாளரே சபையின் கணக்கீட்டு அலுவலராதல் வேண்டும்.

(3) தவிசாளர் 5 ஆம் பிரிவின் (ஊ) என்னும் பந்தியின்கீழ் சபையினால் அவருக்குக் கையளிக்கப்படக்கூடியவாறான அத்தகைய தத்துவங்களைப் பிரயோகித்தலும், கடமைகளையும் பணிகளையும் புரிதலும் வேண்டும்.

(4) தவிசாளர், சுகயீனம் அல்லது வேறேதேனும் இயலாமை அல்லது இலங்கையில் இல்லாமை காரணமாக, அவரது பதவிக்குரிய கடமைகளைத் தற்காலிகமாகப் புரிய இயலாதவராக இருப்பின், அமைச்சர் அவரது இடத்தில் செயலாற்றுவதற்கென 3 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (அ) எனும் பந்தியின் கீழ் நியமிக்கப்பட்ட சபையின் வேறோர் உறுப்பினரை நியமிக்கலாம்.

(5) நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் ஒருப்பாட்டுடன் அமைச்சரால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய சம்பளம் அல்லது ஊதியம் தவிசாளருக்குக் கொடுக்கப்படுதல் வேண்டும்.

(6) மூன்றாம் பிரிவின் (6) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, தவிசாளரின் பதவிக்காலமானது சபையில் அவரது உறுப்பாண்மைக் காலப்பகுதியாதல் வேண்டும்.

குழுக்களை நியமித்தல்.

7. சபையானது, அமைச்சரின் முன்னங்கீகாரத்துடன் —

(அ) சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறாக, இப் பிரிவின் (இ) என்னும் பந்தியில் குறித்துரைக்கப் பட்டவாறான அத்தகைய எண்ணிக்கையினரான அதன் உறுப்பினர்களை அல்லது வேறு ஆட்களைக் கொண்ட அத்தகைய குழுக்களை நியமிக்கலாம் ;

(ஆ) அத்தகைய குழுக்களின் அலுவல் நியதிகள், தத்துவங்கள், பணிகள் அத்துடன் கடமைகள் என்பவற்றைத் தீர்மானிக்கலாம் ;

(இ) சபையின் எவரேனும் அலுவலரை அல்லது அத்தகைய குழுவின் அலுவல் நியதிகளில் தோதான விசேடத்துவ அறிவை அல்லது சிறப்பான அக்கறையைக் கொண்டுள்ள வேறெவரேனும் ஆளை ஏதேனும் அத்தகைய குழுவின் உறுப்பினர் ஒருவராக நியமிக்கலாம், ஆயின் சபையின் உறுப்பினர்களல்லாதவர்களான அத்தகைய ஆட்கள், 19 ஆம் பிரிவின்கீழ் தாபிக்கப்பட்ட நிதியத்தின் பணங்களின் ஏதேனும் பாகத்தின் செலவினங்களை அதிகாரமளிக்கும்படி சபைக்கு அதிகாரமளிக்கின்றதான அல்லது வேண்டுகின்றதான ஏதேனும் தீர்மானத்தின் மீது அத்தகைய குழுக்களின் கூட்டங்களில் வாக்களிப்பதற்கு உரித்துடையராதலாகாது ; அத்துடன்

(ஈ) அத்தகைய குழுக்களின் அலுவல்களைக் கொண்டு நடாத்துவதற்கான விதிகளை ஆக்கலாம்.

சபையின் கூட்டங்கள்.

8. சபையானது மாதம் ஒரு தடவையாவது கூடுதல் வேண்டும்.

கூட்ட நடப்பெண்.

9. சபையின் கூட்டமொன்றிற்கான கூட்ட நடப்பெண் ஐந்து உறுப்பினர்களாதல் வேண்டும்.

சபையின் கூட்டங்களிலான நடவடிக்கை முறை.

10. (1) ஒன்பதாம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, சபையானது, அதன் கூட்டங்கள், அத்தகைய கூட்டங்களில் அலுவல்களைக் கொண்டு நடாத்துதல் ஏன்பன தொடர்பாக, அதன் சொந்த நடவடிக்கைமுறையை ஒழுங்குபடுத்தலாம்.

(2) பதின்மூன்றாம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட பணிப்பாளர் தலைமையதிபதி சபையின் செயலாளராகச் செயலாற்றுதல் வேண்டும். செயலாளர் சபையின் எல்லாக் கூட்டங்களுக்கும் சமுகமளித்தல் வேண்டுமென்பதுடன் அத்தகைய கூட்டங்களின் குறிப்புக்களை வைத்திருத்தலும் வேண்டும். செயலாளர் அத்தகைய கூட்டம் எதிலும் வாக்களிப்பதற்கு உரித்துடையவராதலாகாது.

(3) தவிசாளர் அல்லது அவர் வருகைதராதவிடத்து, பணிப்பாளர் தலைமையதிபதி, எந்நேரத்திலும் சபையின் விசேட கூட்டமொன்றைக் கூட்டலாம். அத்துடன் சபையின் ஆகக் குறைந்தது நான்கு உறுப்பினர்களின் வேண்டுகோளின்மீது, சபையின் விசேட கூட்டமொன்றைக் கூட்டுதல் வேண்டும்.

(4) சபையின் ஏதேனும் கூட்டத்தில் தீர்மானிக்கப்படவேண்டிய எல்லாக் கருமங்களும், சமுகமாயிருக்கும் உறுப்பினர்களுள் பெரும்பான்மையோரின் வாக்கினால் முடிவுசெய்யப்படுதல் வேண்டும். வாக்குகள் சரிசமமாக இருக்கும் விடயத்தில் தவிசாளர் அல்லது சபையின் அத்தகைய கூட்டத்திற்குத் தலைமை தாங்கும் எவரேனும் உறுப்பினர், அவரது சொந்த வாக்கிற்கு மேலதிகமாக அறுதியிடும் வாக்கொன்றையும் கொண்டிருத்தல் வேண்டும்.

(5) சபையின் செயல் அல்லது முடிவு அல்லது நடவடிக்கை எதுவும் அதன் உறுப்பினர்களிடையே வெற்றிடமொன்றுளது என்ற அல்லது அதன் உறுப்பினர் ஒருவரின் நியமனத்தில் ஏதேனும் குறைபாடுளது என்ற காரணத்தினால் மட்டும் செல்லுபடியற்றதாக்கப்படுதலாகாது.

*சபையின் ஆதனம், பணம் முதலியவற்றைப் பிரயோகித்தல்.*

**11.** சபையால் கொள்ளப்பட்ட அல்லது வைத்திருக்கப்படும் எல்லா ஆதனங்களும் அத்துடன் சபைக்குச் செலுத்தப்பட்ட அல்லது சபையால் பெறப்பட்ட எல்லாப் பணங்களும் அதன் பணிகளை முன்னெடுத்துச் செல்வதில் பயன்படுத்தப்படுதல் வேண்டும்.

## பாகம் II

## தேசிய நூலக மற்றும் ஆவணத் தொகுப்பு நிலையத்தைத் தாபித்தல்

*தேசிய நூலக மற்றும் ஆவணத் தொகுப்பு நிலையத்தைத் தாபித்தலும் அதன் பணிகளும்.*

**12.** (1) சபையின் முகாமைத்துவத்தின் கீழும் கட்டுப்பாட்டின் கீழும் தேசிய நூலக மற்றும் ஆவணத் தொகுப்பு நிலையம் ஒன்று தாபிக்கப்படுதல் வேண்டும். (இது இதனகத்துப்பின்னர், 'நிலையம்' எனக்குறிப்பீடு செய்யப்படும்).

(2) நாலாம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, நிலையத்தின் பணிகள் பின்வருவனவாதல் வேண்டும் :–

(அ) சமுதாயத்தின் எல்லாப் பிரிவினர்களினதும் பாவனைக்கென அவர்களின் தேவைகளுக்குத் தோதான தேசிய நூல்களின் திரட்டினதும் ஆவணத் தொகுப்பினதும் வளங்களை கிடைக்கச் செய்தல் ;

(ஆ) இலங்கையில் வெளியிடப்பட்டவையும் இலங்கையுடன் தொடர்புடையனவுமான நூல்களினதும் ஆவணத் தொகுப்புப் பொருட்களினதும் தேசியத் திரட்டு ஒன்றினைத் தாபித்து, அபிவிருத்தி செய்து பேணுவதன்மூலம் இலங்கையின் தேசிய, பண்பாட்டு மரபியல்புகளைப் பேணிக்காத்தல் ;

(இ) (179 ஆம் அத்தியாயமான) அச்சீட்டாளர்கள், வெளியீட்டாளர்கள் கட்டளைச்சட்டத்தின்கீழ் தேசிய அருஞ் சுவடிகள் திணைக்களத்தில் வைப்பீடு செய்யப் பட்டுள்ள இலங்கையின் வெளியீடுகளைப் பெறுதல் ;

(ஈ) இலங்கையில் அல்லது இலங்கை தொடர்பில் வெளியிடப்பட்ட வெளியீடுகளின் அல்லது இலங்கையின் தேவைகளுக்கு இயைபான வெளிநாட்டு வெளியீடுகளின் பிரதிகளை கொள்வனவுமூலம் அல்லது வேறு வகையில் தேடிக்கொள்ளுதல் ;

(உ) தேசிய நூலகப் பொருட்களின் பெயர்ப்பட்டியல் உட்பட தேசிய நூற்பட்டியல் சார்ந்த சேவைகள் மற்றும் இலங்கையிலுள்ள நூலகங்களில் வைப்பீடு செய்யப்பட்டுள்ள நூலகப் பொருட்கள் தொடர்பாக தேசிய தரவுத் தளம் ஒன்றினைத் தாபித்தலும் உருவாக்குதலும் ;

(ஊ) இலங்கையில் வெளியிடப்பட்ட அல்லது இலங்கை தொடர்பிலான ஆவணங்களினதும், வெளியீடுகளினதும் தேசிய நூற்பட்டியல்சார் தரவுத்தளம் ஒன்றினைத் தாபித்தலும் உருவாக்குதலும் ;

(எ) இலங்கையின் தேசிய நூற்பட்டியலை வெளியிடுதல் ;

(ஏ) இலங்கைச் சமுதாயத்தின் எல்லாப் பிரிவினர்க்கும் உசாத்துணை, தகவல், குறிப்பாய்வு, ஒளியியற் பிரதியாக்கம், ஆவண ஆராய்ச்சி சேவைகள் என்பவற்றை வழங்குதல் ;

(ஐ) சமுதாயத்தின் எல்லா உறுப்பினர்களுக்கும் இலங்கையில் அல்லது இலங்கைக்கு வெளியே கிடைக்கின்ற அல்லது வருங்காலத்தில் கிடைக்கக்கூடிய நூலக, ஆவணத்தொகுப்பு வளங்களை அணுகுவதற்கு வசதி செய்தல் ;

(ஒ) பகிரங்க, பாடசாலை, கல்விசார் அரசாங்கத் தொடர்பகங்கள் மற்றும் வேறு நூலகங்களின் தொடர்பகங்கள் உட்பட, நூலக, ஆவணத் தொகுப்புத் தொடர்பகங்களினதும் இலங்கையிலுள்ள சமுதாயத்தின் எல்லாப் பிரிவினர்களுக்கும் சேவையாற்றும் ஆவணத்தொகுப்பு நடுநிலையங்களினதும் தாபனத்தையும் அபிவிருத்தியையும் பேணலையும் ஊக்குவித்தலும் மதியுரை வழங்குதலும் துணை புரிதலும் ;

(ஓ) நூலகப் பொருட்களைப் பரிமாற்றம் செய்தல், நூலகங்களுக்கிடையிலான இரவல், ஆவணங்களைப் பிரதிசெய்தல், பணியாட்டொகுதியினரைப் பயிற்றுவித்தல், பரிமாற்றம் செய்தல் என்பன உட்பட, தேசிய, சர்வதேச மட்டங்களில் நூலகங்கள், ஆவணத் தொகுப்பு நிலையங்கள் என்பவற்றின் மத்தியில் ஒத்துழைப்பையும் வளங்களைப் பகிர்ந்து கொள்ளலையும் ஊக்குவித்தலும் அதற்கு வசதியளித்தலும் ;

(ஔ) இலங்கையிலுள்ள நூலகங்களிலும் ஆவணத் தொகுப்பு நிலையங்களிலும் நிலையத்தின் பணியில் புதிய தகவல் தொழினுட்பவியல்களைப் பிரயோகிப்பதன்மூலம் அத்தகைய தொழில்நுட்பவியல்கள் அறிமுகம் செய்யப்படுவதையும் வினைத்திறனுடன் பிரயோகிக்கப்படுவதையும் ஊக்குவித்தலும் அத்தகைய தொழில்நுட்பவியல்கள் அறிமுகம் செய்யப்படுவதுபற்றியும் அத்துடன் அல்லது ஊக்குவிப்புச் செயற்பாடுகள் பற்றியும் வேறு குழுமங்களுக்கு மதியுரையும் உதவியும் பயிற்சியும் வழங்குதலும் ; அத்துடன்

(க) சபை காலத்துக்குக்காலம் தேவைப்படுத்தக்கூடியவாறு, சபையின் பணிகளைப் பின்பற்றி அத்தகைய கருத்திட்டங்களைப் பொறுப்பேற்றலும், அத்தகைய வசதிகளையும் சேவைகளையும் வழங்குதலும் ;

(3) நிலையத்தின் பணிகள் சபையின் பிரதான நிறைவேற்று அலுவலர் என்ற அவரது தன்மையில் பணிப்பாளர் தலைமையதிபதியின் பணிப்பின்கீழ் நிறைவேற்றப்படுதல் வேண்டும்.

## பாகம் III

## சபையின் பணிப்பாளர் தலைமையதிபதியினதும் சபையின் பணியாட்டொகுதியினதும் நியமனம்

சபையின் பணிப்பாளர் தலைமையதிபதியின் நியமனம்.

13. (1) சபையானது, (இச்சட்டத்தில் 'பணிப்பாளர் தலைமையதிபதி' எனக் குறிப்பீடுசெய்யப்படும்) பணிப்பாளர் தலைமையதிபதி ஒருவரை சபையின் பணியாட்டொகுதிக்கு நியமித்தல் வேண்டும். இவர், சபையின் பிரதான நிறைவேற்று அலுவலராகவும் செயலாளராகவும் இருத்தல் வேண்டும் .

(2) இலங்கைத் தேசிய நூலக சேவைகள் சபைச் சட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்டவரும் நியமித்த தேதிக்கு உடன்முன்னரான நாளன்று பதவிவகிக்கின்றவரும் அவரது இளைப்பாறும் வயதையடைந்திராதவருமான தேசிய நூலகச் சேவைகளின் பணிப்பாளர், அவர் சம்மதித்தால் சபையின் முதலாவது பணிப்பாளர் தலைமையதிபதியாக இருத்தல் வேண்டும்.

(3) பணிப்பாளர் தலைமைத்திபதி, சபையின் பொதுவான பணிப்புரைக்கமைய, சபையின் அலுவல்களின் நிர்வாகத்துக்கும் சபையின் அலுவலர்களினதும் சேவையாளர்களினதும் கட்டுப்பாட்டுக்கும் பொறுப்புடையவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் அவர் சபையின் எல்லாத் தீர்மானங்களையும் நிறைவேற்றுவதற்கும் பொறுப்பானவராகவிருத்தல் வேண்டும்.

(4) பணிப்பாளர் தலைமையதிபதி சபையினால் அவருக்குக் கையளிக்கப்பட்க்கூடியவாறான அத்தகைய தத்துவங்களையும் பணிகளையும் கடமைகளையும் பிரயோகித்தலும் புரிதலும் நிறைவேற்றுதலும் வேண்டும்.

(5) பணிப்பாளர் தலைமையதிபதி சபையின் ஏதேனும் கூட்டத்தில் அல்லது இச்சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட வேறேதேனும் குழுவின் கூட்டத்தில் சமுகமளித்துப் பேசுவதற்கு உரித்துடையவராதல் வேண்டும், ஆனால் வாக்களிக்க உரித்துடையவராதலாகாது.

(6) பணிப்பாளர் தலைமையதிபதியின் பதவியானது பணிப்பாளர் தலைமையதிபதியின் இறப்பின்மேல் அல்லது அவரினால் தவிசாளருக்கு அது தொடர்பில் முகவரியிடப்பட்ட பதவி விலகல் கடிதமூலம் வறிதாக வருதல் வேண்டும்.

சபையின் பணியாட் டொகுதி.

14. (1) இச்சட்டத்தினதும் அமைச்சரினால் அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதிகளினதும் ஏற்பாடுகளுக் கமைய, சபையானது அதன் பணிகளை நிறைவேற்றுவதற்கு அவசியமாகக் கூடியவாறான அத்தகைய அலுவலர்களையும் சேவையாளர்களையும் நியமிப்பதற்குத் தத்துவம் கொண்டதாதல் வேண்டும்.

(2) சபையின் அலுவலர்களையும் சேவையாளர்களையும் நியமித்தலானது அதன் சார்பில் செய்யப்பட்ட ஒழுங்கு விதிகளினால் விதித்துரைக்கப்பட்ட, நியமனத்திற்கான ஆட்சேர்ப்பு அத்துடன் நடவடிக்கைமுறைகள் திட்டத்திற்கிணங்க சபையினால் செய்யப்படுதல் வேண்டும்.

(3) இச்சட்டத்தினதும் அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதிகளினதும் ஏற்பாடுகளுக்கமைய, சபையானது சம்பளங்கள் அல்லது வேறு ஊதியங்கள் உட்பட அலுவலர் களினதும் சேவையாளர்களினதும் சேவைகளின் நியதிகளையும் நிபந்தனைகளையும் தீர்மானித்தல் வேண்டும்.

(4) பதவி நீக்கஞ் செய்வதற்கான தத்துவம் உட்பட சபையின் அலுவலர்களினதும் சேவையாளர்களினதும் ஒழுக்காற்றுக் கட்டுப்பாடானது சபையின் மேற்பார்வை, அங்கீகாரம் என்பவற்றுக்கமைய பணிப்பாளர் தலைமையதிபதியினால் பிரயோகிக்கப்படுதல் வேண்டும்.

(5) சபையானது சபையின் அலுவலர்களினதும் சேவை யாளர்களினதும் ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு உட்பட ஏதேனும் கருமம் தொடர்பில் விதிகளை ஆக்கலாம்.

(6) சபையானது சபையினது அலுவலர்களினதும் சேவை யாளர்களினதும் நன்மைக்காக சகாய நிதியங்களையும் திட்டங் களையும் தாபித்து ஒழுங்குபடுத்தலாம் என்பதுடன் அத்தகைய ஏதேனும் நிதியத்துக்கு அல்லது திட்டத்திற்கு உதவுதொகை களையும் செய்யலாம்.

சபையின் பணியாட் டொகுதிக்கு பகிரங்க அலுவலர்களை நியமித்தல்.

15. (1) சபையின் வேண்டுகோளின்பேரில், பகிரங்க சேவையி லுள்ள எவரேனும் அலுவலர், அத்தகைய அலுவலரினதும் அமைச்சருக்கான அத்துடன் பொதுநிருவாகம் எனும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சருக்கான செயலாளர்களி னதும் சம்மதத்துடன், சபையினால் தீர்மானிக்கப்படக்கூடிய வாறான அத்தகைய காலப்பகுதிக்கு சபையின் பணியாட் டொகுதிக்கு தற்காலிகமாக நியமிக்கப்படலாம் அல்லது அத்தகைய பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

(2) சபையின் வேண்டுகோளின்பேரில், ஏதேனும் உள்ளூர் அதிகாரசபையிலுள்ள எவரேனும் அலுவலர், அத்தகைய அலுவலரினதும் அமைச்சருக்கான செயலாளரினதும் மாகாண சபைகள் எனும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரினதும் சம்மதத்துடன் சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்கு சபைக்கு மாற்றுச் சேவைக்கு விடப்படலாம்.

(3) எவரேனும் பகிரங்க அலுவலர், சபையின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்பட்டுள்ளவிடத்து, 1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் அவருக்கும் அவர் தொடர்பிலும் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையதாதல் வேண்டும்.

(4) எவரேனும் பகிரங்க அலுவலர் சபையின் பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்பட்டுள்ளவிடத்து, 1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் அவருக்கும் அவர் தொடர்பிலும் ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடையதாதல் வேண்டும்.

குறித்த சில ஒப்பந்தங்களின் நோக்கத்திற்காக சபைக்கான சேவையானது அரசாங்கத்திற்கான சேவையாகக் கருதப்படல் வேண்டும் என்பது.

16. எவ்வொப்பந்தத்தினால் எவரேனும் ஆள் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியொன்றுக்கு அரசாங்கத்திற்குச் சேவையாற்ற இணங்கியுள்ளாரோ அந்த ஒப்பந்தத்தை அரசாங்கத்துடன் செய்துகொண்டுள்ள எவரேனும் ஆளை சபையானது தொழிலுக்கமர்த்தியுள்ளவிடத்து, அவ்வாளினால் சபைக்கான ஏதேனும் சேவைக்காலப்பகுதியானது அத்தகைய ஒப்பந்தத்தின் கடப்பாடுகளை நிறைவேற்றும் நோக்கத்திற்காக அரசாங்கத்திற்கான சேவையாகக் கருதப்படல் வேண்டும்.

பணிப்பாளர் தலைமையதிபதிக்கு சபையின் தத்துவங்களைக் கையளித்தல்.

17. (1) சபையானது அதன் தத்துவங்கள், கடமைகள் அல்லது பணிகளுள் எதனையும் பணிப்பாளர் தலைமையதிபதிக்குக் கையளிக்கலாம்.

(2) ஒராம் உட்பிரிவின்கீழ் ஏதேனும் தத்துவம், கடமை அல்லது பணியானது கையளிக்கப் பெற்றவரான பணிப்பாளர் தலைமையதிபதியானவர் சபையின் பணிப்புரைகளுக்கமைய அத்தகைய தத்துவம், கடமை அல்லது பணியைப் பிரயோகித்தலும், புரிதலும், நிறைவேற்றுதலும் வேண்டும்.

சபையின் இலச்சினை.

18. சபையின் இலச்சினையானது –

(அ) சபையானது காலத்திற்குக்காலம் தீர்மானிக்கக் கூடியவாறான அத்தகைய ஆட்களின் கட்டுக்காப்பில் இருத்தல் வேண்டும் ;

(ஆ) சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையில் மாற்றப்படலாம் ; அத்துடன்

(இ) சபையின் அங்கீகாரத்துடனன்றியும் சபையின் உறுப்பினர் ஒருவரினதும் பணிப்பாளர் தலைமையதிபதியினதும் முன்னிலையில் அன்றியும் எத்தகையதுமான ஏதேனும் சாதனத்தில் பொறிக்கப்படுதலாகாது. இவர்கள் இருவரும் தாங்கள் சமுகமாயிருந்ததற்கு அடையாளமாக அச்சாதனத்தில் தமது பெயர்களை எழுதிக் கையொப்பமிடல் வேண்டும் ; அத்தகைய கையொப்பமிடலானது எவரேனும் ஆள் சாட்சியொருவராகக் கையொப்பமிடுவதினின்று தனிவேறானதாயிருத்தல் வேண்டும்.

## பாகம் IV

### நிதி

சபையின் ஆரம்ப முதலீடு.

19. (1) சபையின் ஆரம்ப முதலீடானது பாராளுமன்றத்தின் தீர்மானமொன்றினால் அந்நோக்கத்திற்காக சபைக்கு அளிக்கப்படக்கூடியவாறான அத்தகைய தொகைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) சபையின் மூலதனமானது ஏதேனும் ஒதுக்கீட்டுச் சட்டத்தினால் அல்லது பாராளுமன்றத்தின் ஏதேனும் தீர்மானத்தினால் அதிகாரமளிக்கப்படக்கூடியவாறான அத்தகைய தொகைகளால் காலத்திற்குக்காலம் அதிகரிக்கப்படலாம்.

சபையின் நிதியம்.

20. (1) சபையானது (இச்சட்டத்தில் 'நிதியம்' எனக் குறிப்பீடு செய்யப்படுகின்ற) தேசிய நூலக மற்றும் ஆவணப்படுத்தற் சேவைகள் சபை நிதியம் என அழைக்கப்படுகின்ற அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) நிதியத்தில் பின்வருவன வரவுவைக்கப்படுதல் வேண்டும் :–

(அ) சபையின் பயன்பாட்டுக்காகப் பாராளுமன்றத்தினால் காலத்திற்குக்காலம் வாக்களிக்கக்கூடியவாறான, அத்தகைய எல்லாப் பணத்தொகைகள் ;

(ஆ) இச்சட்டத்தின்கீழ் சபையினால் அதன் தத்துவங்களை, பணிகளை அத்துடன் கடமைகளைப் பிரயோகிக்கையில், புரிகையில் அத்துடன் நிறைவேற்றுகையில் பெறக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகள் ;

(இ) இலங்கையிலாயினுஞ்சரி இலங்கைக்கு வெளியிலாயினுஞ்சரி, எத்தன்மைத்தான ஏதேனும் வழிகளிலிருந்து கடன்கள், நன்கொடைகள், கொடைகள் அல்லது மானியக்கொடைகள் மூலம் சபையினால் பெறக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகள் ; அத்துடன்

(ஈ) பிரிவு 32 இன் (1) ஆம் உட்பிரிவின்கீழ் நிதியத்திற்குக் கைமாற்றப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகள்.

(3) சபையின் நிதியத்திலிருந்து பின்வருவன செலுத்தப்படுதல் வேண்டும் :–

(அ) இச்சட்டத்தின்கீழ் சபையினால் அதன் தத்துவங்களை, கடமைகளை அத்துடன் பணிகளைப் பிரயோகிக்கையில், நிறைவேற்றுகையில் அத்துடன் புரிகையில் உறப்பட்ட ஏதேனும் செலவினத்தைக் கொடுத்துத் தீர்ப்பதற்குத் தேவைப்படுகின்றவாறான அத்தகைய எல்லாப்பணத்தொகைகள் ; அத்துடன்

(ஆ) இச்சட்டத்தினால் அல்லது சட்டத்தின்கீழ் அத்தகைய நிதியத்திலிருந்து செலுத்தப்படவேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்டவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகள்.

சபையின் நிதியாண்டு.

21. சபையின் நிதியாண்டானது பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும்.

கணக்குகளின் கணக்காய்வு.

22. பகிரங்கக் கூட்டுத்தாபனங்களின் கணக்குகளின் கணக்காய்வு தொடர்பிலான அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகள் சபையின் கணக்குகளின் கணக்காய்வு தொடர்பில் ஏற்புடைத்தாதல் வேண்டும்.

## பாகம் V

## பொது

சபை தொடர்பில் அமைச்சருக்குள்ள தத்துவங்கள்.

23. (1) அமைச்சர் காலத்திற்குக்காலம் சபையின் தத்துவங்களைப் பிரயோகிப்பது, கடமைகளை நிறைவேற்றுவது பற்றி பொதுவான பணிப்புரைகளை சபைக்கு எழுத்தில் வழங்கலாமென்பதுடன் சபையானது அத்தகைய பணிப்புரைகளுக்குப் பயன்கொடுத்தலும் வேண்டும்.

(2) அமைச்சர் காலத்திற்குக்காலம் அவர் குறித்துரைக்கக் கூடியவாறான அத்தகைய ஆளினால் அல்லது ஆட்களினால் புலனாய்வு செய்யப்பட்டு அறிக்கையிடப்படவேண்டியதான சபையின் எல்லா அல்லது ஏதேனும் நடவடிக்கைகள் பற்றி கட்டளையிடலாம் என்பதுடன் அத்தகைய கட்டளையானது செய்யப்பட்டதன்மேல், சபையானது அத்தகைய கட்டளையைக் கொண்டுநடாத்துவதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய எல்லாத் தகவலையும் சமர்ப்பித்தலும் அத்தகைய எல்லா வசதிகளை அளித்தலும் வேண்டும்.

அரச காணி அல்லது கட்டடம் சபைக்குக் கிடைக்கச் செய்தல்.

24. ஏதேனும் அரச காணி அல்லது அரச கட்டடம், அரச காணிகள் எனும் விடயத்திற்கு அப்போதைக்குப் பொறுப்பான அமைச்சரின் ஒருப்பாட்டுடன் அமைச்சரினால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான அத்தகைய நிபந்தனைகளுக்கமைய, சபையின் எவரேனும் அலுவலர் அல்லது சேவையாளரினால் வதிவிடமொன்றாகப் பயன்படுத்துவது உட்பட சபையின் ஏதேனும் நோக்கத்திற்காக சபைக்கு பயன்படுத்தப்பட கிடைக்கற்பாலதாகச் செய்யப்படலாம் அல்லது பராதீனப்படுத்தப்படலாம்.

25. சபையானது, சபையின் ஒவ்வொரு நிதியாண்டு முடிந்த தன் பின்னரான ஆறுமாத காலப்பகுதி முடிவடைய முன்னர், அவ்வாண்டின்போது சபையின் நடவடிக்கைகள் பற்றிய முழுமையான கணக்கொன்றைக் காட்டுகின்ற அறிக்கையொன்றை அமைச்சருக்கு அனுப்புதல் வேண்டு மென்பதுடன் அமைச்சர் அவற்றின் பிரதிகளைப் பாராளு மன்றத்தில் வைக்கப்படச் செய்வித்தலும் வேண்டும்.

சபையானது அதன் நடவடிக்கைகள் பற்றிய வருடாந்த அறிக்கையைச் சமர்ப்பித்தல்.

26. சபையானது, இலஞ்சச் சட்டத்தின் கருத்திற்குள் அட்ட வணைப்படுத்தப்பட்ட நிறுவனமொன்றாகக் கருதப்படலும் வேண்டும்.

சபையானது இலஞ்சச் சட்டத்தின் கருத்திற்குள் அட்டவணைப் படுத்தப்பட்ட நிறுவனம் ஒன்றாகக் கருதப்படுதல் வேண்டுமென்பது.

27. சபையின் எல்லா உறுப்பினர்களும், அலுவலர்களும், சேவையாளர்களும் தண்டனைச் சட்டக்கோவையின் கருத் தெல்லைக்குள்ளாகவும் அதன் நோக்கங்களுக்காகவும் பகிரங்க சேவையாளர்கள் எனக் கருதப்படுதல் வேண்டும்.

சபையின் உறுப்பினர்களும் அலுவலர்களும் சேவையாளர்களும் பகிரங்க சேவையாளர்களாகக் கருதப்படுதல்.

28. (1) (அ) இச்சட்டத்தின்கீழ் சபையினால் நன்னோக்கத் துடன் செய்யப்படும் அல்லது செய்யப்பட்ட தாகக் கருதப்படும் ஏதேனும் செயலுக்காகச் சபைக்கு எதிராக,

இச்சட்டத்தின்கீழ் எடுக்கப்பட்ட செயலுக்கான பாதுகாப்பு.

(ஆ) இச்சட்டத்தின்கீழ் அல்லது சபையின் பணிப் பின் மேல் அவரினால் செய்யப்படும் அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப்படும் ஏதேனும் செயலுக்காக,

சபையின், எந்தவோர் உறுப்பினருக்கு, அலுவலருக்கு, சேவையாளருக்கு அல்லது முகவருக்கு எதிராகத் துடர்ச்சி அல்லது குற்றவழக்கு எதுவும், தொடுக்கப்படுதலாகாது.

(2) இச்சட்டத்தின்கீழ் அல்லது சபையின் பணிப்பின்மீது அவரினால் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப்பட்ட ஏதேனும் செயல் தொடர்பாக ஏதேனும் நீதிமன்றத்தின் முன் அவருக்கெதிராகக் கொண்டுவரப்பட்ட ஏதேனும் துடர்ச்சி அல்லது குற்றவழக்கில் (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட எவரேனும் ஆளினால் உறப்பட்ட எவையேனும் செலவினங்கள், நீதிமன்றமானது அத்தகைய செயல் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்டது எனக்கொண்டால், சபையின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

ஒழுங்கு விதிகள்.

29. (1) அமைச்சரானவர் பின்வரும் எல்லாக் கருமங்கள் தொடர்பிலும் அல்லது அவற்றுள் ஏதேனும் கருமம் தொடர்பில் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம் :–

(அ) சபைக்கு ஆட்சேர்ப்பதற்கான திட்டங்களும் அத்துடன் சபைக்கு அலுவலர்களையும் சேவையாளர்களையும் நியமிப்பதற்கான நடவடிக்கை முறைகளும் ;

(ஆ) கூலி, சம்பளங்கள் அத்துடன் வேறு ஊதியம் என்பன உட்பட சபையின் அலுவலர்களினதும் சேவையாளர்களினதும் சேவைக்கான நியதிகளும் நிபந்தனைகளும் ;

(இ) சபையின் அலுவலர்களினதும் சேவையாளர்களினதும் நன்மைக்கான சகாயநிதிகளும் செயற் திட்டங்களும்.

(2) அமைச்சரால் ஆக்கப்படும் ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய வெளியீட்டுத் திகதியன்று அல்லது ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய திகதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(3) ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் கசெற்றில் வெளியிடப் பட்டதன் பின்னர் வசதியாகக் கூடியஅளவு விரைவாக அங்கீகாரத்துக்கெனப் பாராளுமன்றத்தின் முன்னர் கொணரப் படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஒழுங்குவிதி எதுவும், அங்கீகாரம் மறுக்கப்பட்ட திகதியிலிருந்து, அதன்கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி நீக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) அமைச்சரால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி எதுவும், எந்தத் திகதியன்று அவ்வாறு நீக்கப்பட்டதாகக் கருதப்படுகின்றதோ அந்தத் திகதி பற்றிய அறிவிப்பானது கசெற்றில் வெளியிடப் படுதல் வேண்டும்:

30. இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைவாக, சபையானது பின்வரும் எல்லாக் கருமங்கள் தொடர்பிலும் அல்லது அவற்றுள் ஏதேனும் கருமம் தொடர்பில் விதிகளை ஆக்கலாம் :— சபையின் விதிகள்.

(அ) இச்சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட தேசிய நூல் நிலையம் மற்றும் ஆவணப்படுத்தல் நிலையம் சபையினால் நியமிக்கப்பட்ட குழுக்கள் அத்துடன் இச்சட்டத்தின் கீழ், காலத்துக்குக்காலம் தாபிக்கப்படுகின்ற வேறு ஏதேனும் நூல் நிலையம் அல்லது ஆவணப்படுத்தல் நிலையம் என்பவற்றின் அலுவல்களைக் கொண்டு நடாத்துதல் உள்ளடங்கலாகச் சபையின் அலுவல்களின் நிருவாகம் ;

(ஆ) சபையின் நிகழ்ச்சித்திட்டங்களும், செயற் திட்டங்களும், ஆண்டு வரவு செலவுத்திட்டமும், அறிக்கைகளும், கணக்குகளும் அத்துடன் அத்தகைய நிகழ்ச்சித் திட்டங்களும், செயற்திட்டங்களும், ஆண்டு வரவு செலவுத்திட்டமும், அறிக்கைகளும், கணக்குகளும் சமர்ப்பிக்கப்படவேண்டிய முறையும் ;

(இ) ஏழாம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட குழுக்களின் தொழிலின் கொண்டுநடாத்துகை ; அத்துடன்

(ஈ) எக்கருமங்கள் தொடர்பில் விதிகள் ஆக்கப்பட வேண்டுமென இச்சட்டத்தினால் அதிகாரமளிக்கப்பட்டுள்ளதோ அத்தகைய வேறு கருமங்கள்.

## பாகம் VI

### நீக்குதலும், நிலைமாறுகால ஏற்பாடுகளும்

31. 1970 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, இலங்கை தேசிய நூல்நிலைய சேவைகள் சபைச் சட்டமானது நியமிக்கப்பட்ட திகதியிலிருந்து நீக்கஞ் செய்யப்படுகிறது. 1970 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்கச் சட்டத்தை நீக்குதல்.

32. (1) நியமிக்கப்பட்ட திகதிக்கு நேர்முந்திய நாளன்று, அத்தகைய நீக்கஞ் செய்யப்பட்ட சட்டத்தின் 16 ஆம் பிரிவின்கீழ் தாபிக்கப்பட்ட நிதியத்தில் மிகுதியாகவுள்ள ஏதேனும் பணம், நியமிக்கப்பட்ட திகதியிலிருந்து இச்சட்டத்தின் 19 ஆம் திகதியின் கீழ் தாபிக்கப்பட்ட சபையின் நிதியத்துக்கு மாற்றப்படுதல் வேண்டும். நிலைமாறு கால ஏற்பாடுகள்.

(2) நியமிக்கப்பட்ட திகதிக்கு உடனடியாக நேர்முந்திய நாளன்று அத்தகைய நீக்கஞ் செய்யப்பட்ட சட்டத்தினால் தாபிக்கப்பட்ட இலங்கை தேசிய நூல்நிலைய சேவைகள் சபையின் சேவையிலுள்ள தங்களின் முறையான ஓய்வூதிய வயதை எய்தாத எல்லா அலுவலர்களும் வேறு ஊழியர்களும் அவர்களின் சம்மதத்துடன் நியமிக்கப்பட்ட திகதியிலிருந்து நீக்கஞ் செய்யப்பட்ட சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட இலங்கைத் தேசிய நூல்நிலைய சேவைகள் சபையின் சேவையிலுள்ள சம்பளங்கள் அல்லது கூலிகள், ஊழியத்தை கொண்டிருந்த வாறான, முடிவுறுத்தல், படிகள் அல்லது அவர்கள் அனுப வித்தவாறான வேறு நலன்கள் தொடர்பான நியதிகள் உள்ளடங்கலான நியதிகளின், அதையொத்த நியதிகளின் மீது நியமிக்கப்படுதல் வேண்டும் :

ஆயின், இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகள், நியமிக்கப்பட்ட திகதியன்று அல்லது அதற்கு முன்னர், பகிரங்கசேவையில் அல்லது ஏதேனும் மாகாண பகிரங்கசேவையில் அல்லது ஓர் உள்ளூரதிகாரசபையில் ஒரு பதவியை ஏற்றுக்கொண்டுள்ள வரும் அத்துடன் அதற்கு நியமிக்கப்பட்டவருமாக உள்ள ஓர் அலுவலர் அல்லது ஊழியர் விடயத்தில் ஏற்புடையதாக இருத்தல் ஆகாது.

(3) நியமிக்கப்பட்ட திகதிக்கு முன்னர், நீக்கஞ் செய்யப்பட்ட சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட சபையினால், சபையுடன் அல்லது சபைக்காக உறப்பட்ட எல்லாக் கடன்களும், கடப்பாடுகளும், பொறுப்புக்களும் அத்துடன் நிறைவேற்றப்பட்ட அல்லது செய்துகொள்ளப்பட்ட எல்லா ஒப்பந்தங்களும், உறுதிகளும், பிணைமுறிகளும், உடன்படிக்கைகளும், வேறு சாதனங்களும் அத்துடன் செய்துகொள்ளப்படுவதற்கு ஈடுபட்டுள்ள எல்லாக் கருமங்களும் காரியங்களும், நியமிக்கப்பட்ட திகதியிலிருந்து இச்சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட சபையினால், சபையுடன் அல்லது சபைக்காக உறப்பட்ட, நிறைவேற்றப்பட்ட, செய்து கொள்ளப்பட்ட அல்லது செய்து கொள்ளப்படுவதற்கு ஈடுபட்டுள்ள கடன்கள், கடப்பாடுகள், பொறுப்புக்கள், ஒப்பந்தங்கள், உறுதிகள், பிணைமுறிகள், உடன்படிக்கைகள், வேறு சாதனங்கள் அத்துடன் எல்லாக் கருமங்களும் காரியங்களும் எனக் கருதப்படுதல் வேண்டும்.

(4) (அ) நியமிக்கப்பட்ட திகதிக்கு முன்னர் நீக்கஞ் செய்யப்பட்ட சட்டத்தின்கீழ்த் தாபிக்கப்பட்ட சபையினால் அல்லது அதற்கெதிராக ஏதேனும் நீதிமன்றத்தில் அல்லது நியாயசபையில் தொடுக்கப்பட்டு அத்துடன் அத்திகதியில் முடிவுறாதிருக்கின்ற எல்லாத் துடர்ச்சிகளும், குற்ற வழக்குகளும், மேன்முறையீடுகளும் அல்லது வேறு குடியியல், குற்றவியல் சட்டவழக்கு நடவடிக்கைகளும் இச்சட்டத்தினால் தாபிக்கப்பட்ட சபையினால் அல்லது அதற்கெதிராகத் தொடுக்கப்பட்டிருக்கும் துடர்ச்சி, குற்ற வழக்குகள், மேன்முறையீடுகள் அல்லது வேறு குடியியல், குற்றவியல் சட்டவழக்கு நடவடிக்கைகள் எனக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், அதற்கிணங்க அவை தொடர்ந்து நடைபெறுதலும் வேண்டும்.

(ஆ) நியமிக்கப்பட்ட திகதிக்கு முன்னர் தாபிக்கப்பட்ட சபைக்கு சார்பாக அல்லது சபைக்கு எதிராகத் தகுதிவாய்ந்த ஒரு நீதிமன்றத்தினால் அல்லது நியாயசபையினால் ஆக்கப்பட்டு அத்துடன் அத்திகதியில் பூர்த்திசெய்யப்படாமலுமுள்ள எல்லாத் தீர்வைகளும் அல்லது கட்டளைகளும் இச்சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட சபையின் சார்பாக அல்லது சபைக்கு எதிராக ஆக்கப்பட்ட தீர்வைகளாக அல்லது கட்டளைகளாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் அதற்கிணங்க வலுவுக்கிடப்படுதலும் வேண்டும்.

(இ) நியமிக்கப்பட்ட திகதியில், நீக்கஞ் செய்யப்பட்ட சட்டத்தின்கீழ்த் தாபிக்கப்பட்ட சபையின் சகாய நிதியிலுள்ள பணம் அதன் மீது திரண்டுள்ள வட்டியுடன் சேர்த்து இச்சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட சகாய நிதியத்துக்கு மாற்றப்படுதல் வேண்டும் என்பதுடன், நியமிக்கப்பட்ட திகதிக்கு உடனடியாக நேர்முந்திய நாளில் நீக்கஞ்செய்யப்பட்ட சட்டத்தின் கீழ்த் தாபிக்கப்பட்ட சகாய நிதியத்துக்கு உதவுதொகை செலுத்துநராகவுள்ள ஒவ்வொரு சகாய நிதி செலுத்துநரும், இச்சட்டத்தின்கீழ்த் தாபிக்கப்பட்ட சகாயநிதிக்கு உதவுதொகை செலுத்துநராகக் கருதப்படுதலும் வேண்டும்.

(ஈ) நியமிக்கப்பட்ட திகதிக்கு நேர்முந்திய நாளன்று, நீக்கஞ்செய்யப்பட்ட சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட சபைக்கு உரித்தாக்கப்பட்ட, அதனால் சட்ட முறையாகக் கொள்வனவு செய்யப்பட்ட அல்லது கொள்ளப்பட்ட அல்லது குத்தகைக்கு எடுக்கப்பட்ட அல்லது கையுதிர்ப்பிற்கு இடப்பட்ட அல்லது வேறு ஏதேனும் முறையில் சபைக்கு மாற்றஞ் செய்யப்பட்ட அசைவுள்ள அல்லது அசைவற்ற எல்லா ஆதனமும், அத்திகதியன்று அதனோடு சேர்ந்துள்ள, இணைந்துள்ள, அதற்கு ஏற்புடைத்தான நியதிகளினதும் நிபந்தனைகளினதும் மீது இச்சட்டத்தினால் தாபிக்கப்பட்ட சபைக்கு உரித்தாக்கப்படுதல் வேண்டும்.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

33. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பொருள் கோடல்.

34. இச்சட்டத்தில், சந்தர்ப்பம் வேறு வகையாகத் தேவைப் படுத்தினாலன்றி —

"தவிசாளர்" என்பது, இச்சட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்ட சபையின் தவிசாளர் என்று பொருள்படும் ;

"நூல்நிலையமும் ஆவணப்படுத்தும் பொருட்களும்" என்பது, எழுத்திலானதாயினுஞ்சரி, அச்சடித்ததாயினுஞ்சரி, வரைபடத்துடனாயினுஞ்சரி, இலத்திரனியலினுமாயினுஞ்சரி, காந்தவியலாயினுஞ்சரி, ஒளியியலாயினுஞ்சரி அல்லது வேறு வகையிலாயினுஞ்சரி ஏதேனும் வடிவத்தில், தகவல் அல்லது இலக்கியம், ஆக்கபூர்வமான அல்லது கலை, எண்ணங்கள் என்பன பதியப்படுதல், களஞ்சியப்படுத்தப் படுதல் அல்லது மீண்டும் தோற்றுவிக்கப்படுதல் என்று பொருள்படுவதுடன் ; கையெழுத்துப்படிகள், அச்செழுத்துப்படிகள், புத்தகங்கள், செய்தித்தாள்கள், பருவவெளியீடுகள், வரைபடங்கள், நுணுக்கப்படிவம், இசை, ஒளிப்படங்கள், பதிவுகள், வரைதல்கள், இயக்கப்படச் சுருள்கள், ஒலிப்பதிவுகள், வீடியோப்பதிவுகள், என்பனவற்றையும் உள்ளடக்கும், அத்துடன் "நூல்நிலையமும், ஆவணப்படுத்தும் மூலவளங்களும்" "நூல்நிலையமும் ஆவணப் படுத்தும் சேவைகளும்" என்னும் சொல்லமைப்புகள் அதற்கிணங்கப் பொருள் கொள்ளப்படுதலும் வேண்டும் ;

"உள்ளூரதிகாரசபை" என்பது, மாநகரசபைக் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 252) கீழ் அமைக்கப்பட்ட ஒரு மாநகரசபை, நகரசபைக் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 255) கீழ் அமைக்கப்பட்ட நகரசபை, அல்லது 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, பிரதேசசபைச் சட்டத்தின்கீழ் அமைக்கப்பட்ட ஒரு பிரதேசசபையென்று பொருள்படும் என்பதுடன், அத்தகைய ஏதேனும் சபையினால் பிரயோகிக் கப்பட்ட, புரியப்பட்ட அல்லது நிறைவேற்றப்பட்ட தத்துவங்கள், கடமைகள், பணிகள் என்பவற்றிற்கு நேரொத்ததாகவுள்ள அல்லது ஒத்ததாகவுள்ள தத்துவங்கள், கடமைகள், பணிகள், என்பனவற் றைப் பிரயோகிப்பதற்கும், புரிவதற்கும் அல்லது நிறைவேற்றுவதற்கும் என ஏதேனும் எழுத்திலான சட்டத்தினால் அல்லது சட்டத்தின்கீழ் உருவாக்கப் பட்ட அல்லது தாபிக்கப்பட்ட ஏதேனும் அதிகார சபையையும் உள்ளடக்கும் ;

"அமைச்சர்" என்பது அரசியலமைப்புச் சட்டத்தின் 44 ஆம் உறுப்புரையின்கீழ் நியமிக்கப்பட்டவரும், கல்வி என்னும் விடயம் குறித்தொதுக்கப் பட்டுள்ளவருமான அமைச்சர் என்று பொருள்படும் ;

"தேசிய நூல்நிலையமும் ஆவணப்படுத்தும் நிதியமும்" என்பது, இச்சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட தேசிய நூல்நிலையமும் ஆவணப்படுத்தும் நிலையமும் எனப் பொருள்படும் ;

"மாகாணசபை" என்பது, அரசியலமைப்புச் சட்டத்தின் XVII அ என்னும் உறுப்புரையினால் தாபிக்கப்பட்ட ஒரு மாகாணசபை எனப் பொருள்படும் ; அத்துடன்

"நீக்கஞ்செய்யப்பட்ட சட்டம்" என்பது, 1970 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, இலங்கை தேசிய நூல்நிலையச் சேவைகள் சபைச் சட்டம் எனப் பொருள்படும் ;

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387: (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல.32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ்ரோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.